செய்தி வெளியீடு எண்: 465 நாள்:18.07.2021

<u>செய்தி வெளியீடு</u>

**17.7.2021 அன்று சென்னை, நுங்கம்பாக்கம், இந்து சமய அறநிலையத்துறை ஆணையகரத்தில், ராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கர் அருள்மிகு லட்சுமி நரசிம்மர் சுவாமி திருக்கோயில் 9.30 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் கம்பிவட ஊர்திப் பணிகளை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் ஆய்வு மேற் கொண்டார். கம்பிவட ஊர்திப் பணிகளை விரைந்து மேற்கொண்டு பக்தர்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார். மேலும் கம்பிவட ஊர்தி அமைவிடத்தில் பக்தர்களின் அடிப்படை வசதி மேற்கொள்ளவும் திருக்கோயில் வரும் பக்தர்களுக்கு வசதிகள் மேற்கொள்ளவும் பெருந்திட்ட வரைவு**(master plan) **பணிகள் மேற்கொள்வது தொடர்பாக மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. ஆர்.காந்தி அவர்களுடன் ஆய்வு நடத்தினர். மேற்படி ஆய்வின்போது சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.எம்.கே.மோகன், திரு.ஏ.பி.நந்தகுமார், திரு.சி.வி.எம்.பி. எழிலரசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு. குமரகுருபரன், இ.ஆ.ப., கூடுதல் ஆணையர் திருமதி திருமகள், வேலூர் மண்டல இணை ஆணையர் பரஞ்ஜோதி, இணை ஆணையர் திருமதி ஹரிப்பிரியா, திருமதி வான்மதி, திருமதி கவிதா பிரியதர்ஷினி, திருக்கோயில் உதவி ஆணையர் செயல் அலுவலர் திருமதி ஜெயா, திருக்கோயில் உபயதாரர்கள் திரு. எம்.பூபாலன், திரு. கே.ரவி, திரு. நரசிம்ம ராஜு, திரு. ரவிச்சந்திரன் ஆகியோர் உடன் இருந்தனர்.**

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9